इस पुस्तिका में **24** मुद्रित पृष्ठ हैं।
This Booklet contains **24** printed pages.

# MVD18–II

परीक्षा पुस्तिका संख्या
Test Booklet No.

| LANG. CODE |
|---|
| **17** |

## प्रश्न-पत्र—II / PAPER—II
## तमिल भाषा परिशिष्ट / TAMIL LANGUAGE SUPPLEMENT
## भाग IV & V / PART IV & V

परीक्षा पुस्तिका संकेत
**Test Booklet Code**

| **M** |
|---|

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ संख्या 24) पर दिए गए निर्देशों को ध्यान से पढ़ें।**
**Read carefully the Instructions on the Back Cover (Page No. 24) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका के पृष्ठ संख्या 2 व 23 देखें।**
**For Instructions in Tamil, see Page Nos. 2 and 23 of this Booklet.**

### *परीक्षार्थियों के लिए निर्देश :*

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका का एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग—IV (भाषा—I) **या** भाग—V (भाषा—II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं**।
2. परीक्षार्थी भाग I, II, III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेजी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग—IV व भाग—V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर-पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉलपॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत M** है। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका का संकेत, उत्तर-पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं तथा प्रत्येक 1 अंक का है :
   भाग—IV : भाषा—I (तमिल) (प्रश्न सं० 91–120)
   भाग—V : भाषा—II (तमिल) (प्रश्न सं० 121–150)
7. भाग—IV में भाषा—I के लिए 30 प्रश्न और भाग—V में भाषा—II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से सम्बन्धित प्रश्न दिए गए हैं। **यदि भाषा—I और/या भाषा—II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है/हैं, तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लें। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन-पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग—V (भाषा—II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा—I (भाग—IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ़ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर-पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

### *Instructions for Candidates :*

1. This Booklet is a Supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part—IV (Language—I) **OR** Part—V (Language—II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Parts I, II, III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part—IV and Part—V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ballpoint Pen only** for writing particulars on this page/marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **M**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **Two** Parts, IV and V, consisting of **60** Objective-type Questions and each carrying 1 mark :
   Part—IV : Language—I (Tamil) (Q. Nos. 91–120)
   Part—V : Language—II (Tamil) (Q. Nos. 121–150)
7. Part—IV contains 30 questions for Language—I and Part—V contains 30 questions for Language—II. In this Test Booklet, only questions pertaining to Tamil Language have been given. **In case, the language(s) you have opted for as Language—I and/or Language—II is a language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The languages being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part—V (Language—II) in a language other than the one chosen as Language—I (Part—IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ____________________
Name of the Candidate (in Capital letters)

अनुक्रमांक (अंकों में) : ____________________
Roll Number (in figures)

(शब्दों में) : ____________________
(in words)

परीक्षा-केन्द्र (बड़े अक्षरों में) : ____________________
Centre of Examination (in Capital letters)

परीक्षार्थी के हस्ताक्षर : ____________________
Candidate's Signature

निरीक्षक के हस्ताक्षर : ____________________
Invigilator's Signature

Facsimile Signature Stamp of Centre Superintendent ____________________

இந்த நூற்கட்டு 24 பக்கங்கள் கொண்டது. **MVD18–II** தேற்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

LANG. CODE
**17**

**M**

## தாள்—II

# தமிழ் மொழி துணை நூற்கட்டு

## பகுதி IV & V

அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.

இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் **23** & **24**) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.

*தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்*

**1.** இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இந்தப் பகுதி IV (மொழி I) அல்லது பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. இரண்டிற்கும் உரியது அல்ல.

**2.** தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV & V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.

**3.** ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.

**4.** இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை கறுப்பு/நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.

**5.** இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **M** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் பக்கம் 2-லும் அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.

**6.** இந்த தேர்வு நூற்கட்டு 2 பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய 60 பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.

பகுதி—IV : மொழி—I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
பகுதி—V : மொழி—II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)

**7.** பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா 30 வினாக்கள். இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி **I & II** க்கு நீர் தேர்வு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். உம் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

**8.** தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிருந்து தேர்ந்து எடுத்துக் கொண்ட மொழி **I** (பகுதி **IV** இல்) நீங்கலாக வேறொரு மொழியை மொழி **II** (பகுதி **V** க்கு) தேர்ந்து எடுத்துக் கொண்டு விடையளிக்க வேண்டும்.

**9.** இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.

**10.** ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். விடைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிறமை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) : ____________________

தேர்வு வரிசை எண் (எண்ணில்) : ____________________

(எழுத்தில்) : ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) : ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ____________ தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ____________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

தேர்வு எழுதுவோர் மொழி–**I** இல் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி–**IV** (கே.எண். **91–120**) க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part–IV (Q. Nos. 91–120)**, if they have opted **TAMIL** as **Language–I** only.

# Part—IV / பகுதி—IV

## Language—I / மொழிப்பாடம்—I

## Tamil / தமிழ்

தேர்வு எழுதுவோர் மொழி**–I** இல் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி**–IV** (கே. எண். **91–120**) க்கான விடைகளைத் தரவேண்டும்.

பின்வரும் வினாக்களுக்கு (கே. எண். **91–105** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

**91.** மொழிக் கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு கற்பிப்பதற்குச் சிறந்த வழிமுறை :

(1) தனித்தனி மாணவராகக் கற்பித்தல்

(2) குழுவாக அமைத்துக் கற்பித்தல்

(3) மாணவர்களைக் கொண்டு கற்பித்தல்

(4) மேற்கண்ட அனைத்தும்

**92.** புறநிலை மதிப்பீட்டு முறையை (அப்ஜெக்டிவ்) மொழிக் கல்வியில் பயன்படுத்தும் போது அதில் முக்கியமான அம்சமாக அமைய வேண்டியது?

(1) புறவய உண்மை மற்றும் விமர்சன முறை (அப்ஜெக்டிவ், கிரிடிகல்)

(2) புரிதல் முறை மற்றும் நடத்தை முறை

(3) நம்பகத்தன்மை மற்றும் பொருள் பொருத்தம்

(4) மேற்குறித்த அனைத்தும்

**93.** பின்வருவனவற்றில் எது மொழிக்கல்விக்கான பயன் நோக்கம் இல்லை?

(1) கருத்துகளைப் பதிப்பு செய்தல்

(2) மொழியைப் புரிந்து கொள்ளுதல்

(3) எழுத்தை சரளமாகப் பயன்படுத்தல்

(4) படைப்புத்திறன்

**94.** மொழித்திறன் பற்றி பின்வரும் கருத்துகளில் ஒன்று உண்மையற்றது, அது எது?

(1) மொழித்திறன்களை வளர்ப்பதில் பயிற்சியைவிட மொழி பற்றிய கொள்கைகள் அதிக முக்கியத்துவம் உடையது

(2) கவனித்தறிதல், பேச்சு, வாசிப்பு மற்றும் எழுத்து என்ற வரிசையமைப்பில்தான் குழந்தைகள் மொழியைக் கற்கிறார்கள்

(3) பளளிகளில் வாசித்தல், எழுதுதல் திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

(4) நான்கு மொழித்திறன்களும் ஒன்றுடன் ஒன்று உறவுடையவை

**95.** ''ஒரு குழந்தை மொழியை விரைவாகக் கற்கிறது, ஆனால் அதன் இலக்கணத்தை அறிவதில்லை.'' இதனைச் சொன்னவர் யார்?

(1) மகரிஷி பதஞ்சலி

(2) லார்ட் ஸ்வீட்

(3) லார்ட் மக்காலே

(4) ஜீன் பியாஜெட் (ஷான் பியாஷே)

**96.** உங்கள் வகுப்பில் உள்ள மாணவர்கள் கடினமான கேள்விகளையும் சந்தேகங்களையும் மொழிப் பாடத்தில் எழுப்புகிறார்கள். அந்தச் சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

(1) நல்ல தயாரிப்புடன் சென்று சந்தேகங்களை உடனடியாகத் தீர்த்து கேள்விகளுக்கு உடனக்குடன் பதில் அளிப்பீர்கள்

(2) கேள்விகளையும் ஐயங்களையும் குறித்துக்கொண்டு மறுநாள் அவற்றைத் தீர்த்து வைப்பீர்கள்

(3) பாடப்புத்தகத்தைப் படித்து விவாதித்து அவர்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளச் சொல்வீர்கள் பிறகு அவர்களின் கேளிவிகளுக்கு விடையளிப்பீர்கள்

(4) அவ்வகை மாணவர்களைக் கண்டித்து வகுப்பறையின் ஒழுகத்தைக் கடைபிடிக்கச் செய்வீர்கள்

**97.** தேர்வுக்கு முன் படிக்கும் பழக்கத்தினால் மாணவர்களுக்கு நேரும் இழப்பு எது?

(1) அறிவுத்திறன் மேம்படுவதில்லை

(2) அவர்களின் தன்னம்பிக்கை கெடுகிறது

(3) வகுப்பறை கற்பித்தலில் இருந்து அவர்கள் துண்டிக்கப்படுகிறார்கள்

(4) அவர்களால் சுயமான சிந்தனையைச் செய்ய முடியாமல் போகிறது

**98.** மொழிக்கல்லி வகுப்பில் மாணவர்களை உள்ளடக்கும் கற்பித்தல் முறையினால் ஏற்படும் நன்மைகளில் ஒன்று :

(1) மாணவர்கள் வீட்டுப்பாடம் செய்ய வேண்டிய தேவை இல்லை

(2) தேர்வுக்காக விரைவாகப் படிக்கும் பழக்கம் மாணவர்களிடையே வளர்வதில்லை

(3) வகுப்பறையில் ஒழுங்கு கடைபிடிக்கப்படுகிறது

(4) மாணவர்கள் குறுகிய கால அளவில் நிறைய கற்றறிய முடிகிறது

**99.** வெளிப்பாடு மற்றும் கருத்தை .................... மொழி சிறந்த ஊடகம்.

(1) பரப்புவதில்

(2) தொகுப்பதில்

(3) பரிமாறிக்கொள்வதில்

(4) மேற்குறித்த அனைத்திற்கும்

**100.** ஒரு இந்தியக் குழந்தை கற்க வேண்டியது :

(1) தாய் மொழி

(2) தாய் மொழி மற்றும் ஒரு மாநில மொழி

(3) தாய் மொழி மற்றும் ஆங்கிலம்

(4) ஏதாவது மூன்று மொழிகள்

**101.** பல மொழிகளை உள்ளடக்கிய, பலதன்மை மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பறையில் மொழி கற்பித்தல் எதிர் கொள்ளும் சவால்களில் ஒன்று :

(1) பொருத்தமான மொழிக் கற்றலுக்கான சூழ்நிலையை உருவாக்க இயலாமை

(2) கற்பித்தலுக்கான துணைக் கருவிகள் இல்லாமை

(3) மாணவர்களின் கற்றல் திறனில் உள்ள பல்வேறு தன்மைகள்

(4) மாணவர்களிடம் சீரான ஒன்றுபோலான ஆர்வமில்லாத நிலை

**102.** தாய் மொழிக் கல்வியின் அறிவு நோக்கங்களில் இது பொருந்தாது, பின் வருவனவற்றில் எது அது?

(1) மொழிக்கூறுகள் பற்றிய போதுமான அறிவு

(2) உள்ளடக்கம் பற்றிய அறிவைப் பெறுவது

(3) உச்சரிப்பு பற்றிய அறிவைப் பெறுவது

(4) மொழியில் உள்ள பல்வேறு எழுத்து முறைகள் பற்றிய அறிவைப் பெறுவது

**103.** பின் வருவனவற்றில் ஒன்று கற்பித்தல் முறை, எது அது?

(1) செலக்ஷன் முறை

(2) இன்டரெஸ்ட் முறை

(3) மோட்டிவேஷன் முறை

(4) மேற்குறித்த அனைத்தும்

**104.** மொழி கற்பித்தலில் ஒளி-ஒலி துணைக்கருபிகள் இதற்குப் பயன்படுகிறது :

(1) சரியான உச்சரிப்பு

(2) சரியான எழுத்து முறை

(3) சரியான வாசிப்பு

(4) மேற்குறித்த எதுவுமில்லை

**105.** 'ரிமெடியல்' கற்பித்தல் எனும் குறைநீக்க கற்பித்தல் முறை :

(1) அடையாளம் காணுவதில் நேரும் பிரச்சினைகளின் கடினத் தன்மையை மேம்படுத்துகிறது

(2) கற்றலின் சிக்கல்களை நீக்குவதில் வெற்றி அளிக்கிறது

(3) கற்றலின் சிக்கல்களை மேலும் கீழுமாக மாற்றி அளிக்கிறது

(4) கற்றலின் சிக்கல்கள் பற்றிய மொழிக்கொள்கை சார்ந்த அறிவை அளிக்கிறது

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கே. எண். **106–114** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

திராவிட மொழிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என அறியும் முன்னரே மேலை நாட்டவர் அம்மொழிகளை ஆராய்ந்துள்ளனர். திருந்திய திராவிட மொழிகளின் ஆராய்ச்சி குறித்து முன்னரே குறிப்பிடப்பட்டது. ஏனைய திராவிட மொழிகளைப் பொறுத்த அளவில் கூர்க், துளு ஆகிய மொழிகளை முன்னரே அறிந்திருந்தனர். 1798 ஆம் ஆண்டிலேயே ராபர்ட்ஸ் என்பவர் அவை பற்றிய சில செய்திகளைத் தந்துள்ளார், 1837 ஆம் அண்டில் தோதர் மொழி அறியப்பட்டது. 1838 ஆம் ஆண்டில் பிராகூய் மொழி கண்டறியப்பட்டது. திராவிட மொழிகளில் பிராகூய் தவிர, ஏனைய மொழிகளைப் பேசுவோர் இந்தியாவின் தெற்கிலும் இலங்கையின வட பகுதியிலும் ஒருசேர வாழ்கின்றனர். தமக்கெனத் தனித்த வரலாற்றையுடைய மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசுவோர் கடற்கரைப் பகுதிகளிலும் உள்நாட்டுப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவற்றைப் போல இலக்கியச் செம்மையுறாத பிற திராவிட மொழிகளைப் பேசுவோர் பலுச்சிஸ்தான பீடபூமி, வட இந்தியாவிற்கும் தக்காணத்திற்கும் இடைப்பட்ட பகுதி, தென்னாட்டின் மலைப்பகுதிகள் முதலிய உயரமான பிரதேசங்களில் வாழ்வது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி இன்றைய தமிழ்நாடு மாநிலத்திலும், மலையாளம் கேரள மாநிலத்திலும், கன்னடம் மைசூர் மாநிலத்திலும். தெலுங்கு ஆந்திரப் பிரதேசத்திலும் பேசப்படுகின்றன. இம்மாநிலங்கள் சேரும் எல்லைப்பகுதிகளில், இரு மொழிகளையும் மக்கள் பேசுகின்றனர்.

தமிழகத்தின் வடக்கில் தெலுங்கு மொழி பேசும் பகுதி உள்ளது. மேற்கில் கன்னடமும் மலையாளமும் பேசப்படும் பகுதிகள் உள்ளன. மங்களூர் பகுதியில் துளுமொழி பேசப்படுகிறது. குடகு கூர்க் மக்களின் தாய் மொழியாகும். இப்பகுதி மைசூர் மாநிலத்தைச் சேர்ந்ததாகும். படகா, கோட்டா, தோதா முதலிய மொழிகள் நீலகிரியில் பேசப்படுகின்றன. தெலுங்கு மொழி பேசப்படும் பகுதி ஒரு புறத்தில் ஒரியா மொழி பேசப்படும் பகுதியையும் மறுபுறத்தில் மராத்தி மொழி பேசப்படும் பகுதியையும் தொடுகிறது. கோண்டி மொழி அதன் அண்டை மொழியாகும். மகாநதிச் சமவெளியில் உள்ள பீடபூமியில் கூய், கொண்டா மொழிகள் பேசப்படுகின்றன. கோலாமி மொழி மத்தியப்பிரதேசத்திலும் ஹைதராபாத்திலும் பேசப்படுகிறது. பார்ஜி அதற்கு அண்டை மொழியாக விளங்குகின்றது. கன்னட மொழி பேசப்படும் பகுதி மராத்தி, கொங்கணி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகள் பேசப்படும் பகுதிகளைத் தொடுகிறது. கோண்டி மொழி பேசப்படும் பகுதி தெலுங்கு, கோலாமி, முண்டா, மராத்தி முதலிய மொழிகள் பேசப்படும் பகுதிகட்கு அருகில் உள்ளது. திருந்தாத் திராவிட மொழிகளைப் பேசுவோரெல்லாம் மலைப் பகுதிகளிலேயே வாழ்வது நமக்கு வியப்பினை அளிக்கிறது.

**106.** மேலை நாட்டவர் ஆராய்ந்த மொழிகள் பற்றி எது அறியப்படாமல் இருந்தது?

(1) திருந்திய திராவிட மொழிகள் என்பது

(2) திராவிட மொழிகள் ஒரே மொழிக் குடும்பம் என்பது

(3) கூர்க், துளு என்பவை தனித்தனி மொழிகள் என்பது

(4) தோதர் மொழி திராவிடம் என்பது

**107.** இந்தியாவின் தெற்திலும் இலங்கையின் வட பகுதியிலும் வாழ்கின்றவர்கள் :

(1) தமிழ், மலையாளம், கன்னடம் தவிர பிறவற்றைப் பேசுகின்றனர்

(2) பிராகூய், தோதர்மொழி தவிர ஏனைய மொழிகள் பேசுகின்றனர்

(3) பிராகூய் தவிர பிறதிராவிட மொழிகளைப் பேசுகின்றனர்

(4) இலக்கிய செம்மையுறாத திராவிட மொழிகளைப் பேசுகின்றனர்

**108.** தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு மோழிகள் :

(1) தமக்கெனத் தனித்த வரலாற்றை உடையவை

(2) உள்நாட்டு பகுதிகளில் மட்டும் பேசப்படுகின்றன

(3) கடற்கரைப் பகுதிகளில் பேசப்படுவதில்லை

(4) மலைப்பகுதிகளில் அதிகம் பேசப்படுகின்றன

**109.** பலுச்சிஸ்தானம், தென்னாட்டின் மலைப்பகுதிகளில் வாழும் மக்கள் பேசும் மொழிகளை இவ்வாறு குறிப்பிடலாம்

(1) இருமொழித்தன்மை கொண்டவை

(2) இலக்கியச் செம்மையுறாத பிற திராவிட மொழிகள்

(3) இலக்கிய வரலாறு உடைய மொழிகள்

(4) தமக்கெனத் தனித்த வரலாறு உடைய மொழிகள்

**110.** 1798 இல் ...................,, ................... மொழிகள் பற்றிய செய்திகள், 1838 இல் ............. மொழி பற்றிய செய்தி, 1837 இல் ............... மொழி பற்றிய செய்திகள் அறியப்பட்டு குறிக்கப்பட்டுள்ளன.

(1) பிராகூய், துளு, தோதர், கூர்க்

(2) கூர்க், பிராகூய், துளு, தோதர்

(3) கூர்க், துளு, பிராகூய், தோதர்

(4) தோதர், துளு, கூர்க், பிராகூய்

**111.** தமிழநாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகா – பொருத்துக :

(1) மலையாளம், தெலுங்கு, கன்னடம், தமிழ்

(2) தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்

(3) கன்னடம், துளு, தோதர்மொழி, பிராகூய்

(4) தமிழ், மலையாளம், தெலுங்கு, தோதர்

**112.** இரு மொழி பேசும் மக்கள் :

(1) இரு மாநிலங்கள் சேரும் எல்லைப் பகுதிகளில் வாழ்கின்றனர்

(2) தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்களில் வாழ்கின்றனர்

(3) கடற்கரைப் பகுதிகளிலும் உள்நாட்டுப் பகுதிகளிலும் வாழ்கின்றனர்

(4) தென்னாட்டின் மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர்

**113.** தெலுங்கு மொழி பேசப்படும் பகுதியுடன் இணையும் மொழிப் பகுதிகள் என இவற்றைக் கூறலாம் :

(1) ஒரியா, மராத்தி, கூய், கொண்டா

(2) ஒரியா, கொங்கணி, கோண்டி, மராத்தி

(3) தமிழ், கன்னடம், ஒரியா, மராத்தி

(4) தமிழ், மலையாளம், கோலாமி, முண்டா

**114.** கோண்டி மொழி பேசப்படும் பகுதியின் அருகில் உள்ள பகுதிகளின் மொழிகள் :

(1) தெலுங்கு, தமிழ், கன்னடம், கோலாமி

(2) தெலுங்கு, கோலாமி, கொங்கணி, பார்ஜி

(3) கூய், முண்டா, குடகு, துளு

(4) தெலுங்கு, கோலாமி, முண்டா, மராத்தி

**கொடுக்கப்பட்டுள்ள கவிதையைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (*கே. எண்.* 115–120 வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க:**

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங்கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.
உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்!
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்.
இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள் தமிழ உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந் தோமில்லை.
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

**115.** எளியதாக இருக்க வேண்டியது ........................ புதிதாக இயற்ற வேண்டியது .................

(1) நூல், சிந்தனை

(2) நடை, இலக்கண நூல்

(3) படங்கள், சுவடிகள்

(4) பெயர்கள், சிந்தனை

**116.** சுவடிகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும்?

(1) படங்களுடன் எளிய நடையில்

(2) பெயர்கள் உடைய படங்களுடன்

(3) புதிய சிந்தனைகளுக்குப் பெயர்கள் கண்டு அவற்றைத் தெளிவாக விளக்கும் படங்களுடன்

(4) புதிய இலக்கணத்துடன் புதிய பெயர்களுடன்

**117.** செந்தமிழைச் செழுந்தமிழாகச் செய்ய இவை தேவை :

(1) தமிழ்நூல், இலக்கணம், வெளியுலகச் சிந்தனை

(2) புதிய நூல், படங்கள், இலக்கண அறிவு

(3) எளிய நடையில் தமிழ்நூல், புதிய இலக்கணநூல், புதிய சிந்தனைகளைத் தெளிவுறுத்தும் சுவடிகள்

(4) படிப்பு, எழுத்து, எளிமை, சுவடி

**118.** எதற்காக எல்லோரும் நாணிட வேண்டும்?

(1) செந்தமிழ் செழுந்தமிழாய் இல்லாமல் இருத்தலுக்காக

(2) வறுமையின் காரணமாக தமிழர் ஒருவர் கல்வியில்லை என்ற நிலைக்காக

(3) துறை தோறும் நூல்கள் தமிழில் இல்லையென்பதற்காக

(4) தமிழ் ஒளி மதங்களில் சாய்ந்து உள்ள நிலைமைக்காக

**119.** எதில் பல தலைமுறைகள் கழிந்தன? எதனைச் செய்யாமல் விடுத்தோம்?

(1) தமிழ் உயர்ந்ததென்று நமக்குள் சொல்லி, குறைகளை நீக்கும் வழிகளைச் செய்யாமல்

(2) தமிழ் பற்றி அறியாமல். தமிழ் உயர்வென்று சொல்லிச் சொல்லி

(3) ஒருத்தர் தயையுடன் தமிழை வளர்த்து, நூல் கழகங்கள் அமைக்காமல்

(4) குறை களையாமல், தமிழொளியை மதங்களில் இணைக்காமல்

**120.** துறைகள் தோறும் நூல்கள் ..................... பெருக்கி, அவற்றை.................. வைத்துப் பரப்ப வேண்டும்.

(1) உலகியலின் வடிவில், எவ்விடத்தும்

(2) ஊரறிந்த தமிழில், நூல் கழகங்களில்

(3) இலவசமாக, உயர்வாக

(4) பலதுறைகளில், உலகியல் வழியில்

தேர்வு எழுதுவோர் மொழி–**II** இல் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி–**V** (கே.எண். **121–150**) க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part–V (Q. Nos. 121–150)**, if they have opted **TAMIL** as **Language–II** only.

# Part—V / பகுதி—V

## Language—II / மொழிப்பாடம்—II

## Tamil / தமிழ்

தேர்வு எழுதுவோர் மொழி–**II** இல் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி–**V** (கே.எண். **121–150**) க்கான விடைகளைத் தரவேண்டும்.

பின்வரும் வினாக்களுக்கு (கே. எண். **121–135** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

**121.** பலவகைப்பட்ட மாணவர்களை உள்ளடக்கிய வகுப்பில் மாணவர்கள பெரும்பாலும் ............ பிழைகளைச் செய்கிறார்கள்.

(1) படித்தலில்

(2) எழுதுதலில்

(3) பேசுதலில்

(4) இவை அனைத்திலும்

**122.** ''இலக்கணம் நடத்தை முறை சார்ந்தது, அதே சமயம் கருத்து வடிவம் சார்ந்தது.'' இந்தக் கருத்துடன் நீங்கள் எந்த அளவு உடன்படுகிறீர்கள்?

(1) முழுமையாக

(2) ஒரளவு

(3) உடன்படவில்லை

(4) உடன் படலாம் உடன்படாமல் இருக்கலாம்

**123.** தொடக்கநிலை அல்லது உயர் நிலைப்பள்ளி மாணவர்களிடம் மொழி கற்றலில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கு நாம் செய்ய வேண்டியது, அவசியமானது.

(1) மாணவர்களை நூல்களைப் படிக்கும்படி கேட்கலாம்

(2) வாய் மொழியாக மேலும் மேலும் மாணவர்களுக்கு விளக்கம் தரலாம்

(3) மாணவர்களை அதிகமாகச் சொல்வதெழுதுதல் எழுதச் செய்யலாம்

(4) மாணாவர்களின் இலக்கண அறிவை மேம்படுத்தலாம்

**124.** வாழ்மொழி எடுத்துரைப்பிற்கு பொருத்தமற்ற முறை எது?

(1) குரல் வழி எடுத்துரைப்பு

(2) கவிதை வாசிப்பு, ஒப்பித்தல்

(3) நேர்முக எடுத்துரைப்பு

(4) குறியமைப்பு மொழியால் எடுத்துரைத்தல்

**125.** ''தாய்ப் பாலைப் போலவே தாய்மொழி அறிவு வளர்ச்சியும் மனிதர்களுக்கு அவசியமானது'' இதனைச் சொன்னவர் யார்?

(1) ராஜரிஷி டான்டன்

(2) ராய்பர்ன்

(3) மகாத்மா காந்தி

(4) விவேகானந்த்

**126.** மாணவர்களுக்கு அவர்கள் நன்கு பயின்று பழகாத மொழியில் கற்பிக்கும்போது : ............

(1) முறையான புரிதல் சாத்தியமில்லை

(2) தேர்வு நேரத்தில் படிப்பது அல்லது மனப்பாடம் செய்வது என்ற பழக்கத்தை மாணவர்கள் வளர்த்துக் கொள்கிறார்கள்

(3) மாணவர்கள் படிப்பதில் ஆர்வமிழந்து விடுகிறார்கள்

(4) மேற்குறித்த அனைத்தும்

**127.** மொழிக் கல்வியில் மொழியைத் தன்வயப்படுத்துவதில் மிக முக்கியமான பண்புக்கூறு :

(1) கேட்டறிதல் வாசித்தல்

(2) கேட்டறிதல் மட்டும்

(3) வாசித்தல் மட்டும்

(4) எழுதுதல் மட்டும்

**128.** மொழிக்கல்வியில் கற்றல் துணைக் கருவிகளைளத் தயாரிக்கும் போது ஏற்படும் மிக முக்கியமான சவால் :

(1) குறைவான நேரத்தில் அதிக அறிவை அளித்தல்

(2) கடினமான பகுதிகளை பொருத்தமான முறையில் விளக்குவது

(3) பாடத்தின் மீது மாணவர்களின் கவனம்

(4) கற்பித்தலில் ஆசிரியர்கள் செலுத்தும் குறைவான உழைப்பு

**129.** ''புத்திக்கூர்மை உடைய மாணவர்களிடம் உச்சரிப்புத்திறனும், சொல்வளமும் அதிகமாக உள்ளது'' இதனைக் கூறியது யார்?

(1) டெர்மன்

(2) பிஷ்ஷெர்

(3) தம்பா

(4) மேற்குறித்த அனைவரும்

**130.** சொற்களின் பொருளை விளக்குவதை விட நல்ல ஒரு முறை :

(1) சொற்களை விளக்குவது

(2) அகராதியில் சரிபார்ப்பது

(3) வாக்கியத்தில் சொற்களை அமைத்து அவற்றின் பொருளை மாணவர்களே உய்த்து அறிய வாய்ப்பளிப்பது

(4) மொழியைக் கற்பிப்பதன் வழி சொல்லின் பொருளைத் தெளிவு படுத்துவது

**131.** அச்சாக்கப்பட்ட பாடம் இல்லாமலேயே இரண்டாம் மொழியைக் கற்க பின்வருவனவற்றில் எந்த முறை பயன்படுகிறது?

(1) நேட்சரல் அப்ரோச்

(2) லாங்குவேஜ் இம்மர்ஷன்

(3) இலக்கண மொழிபெயர்ப்பு முறை

(4) சிட்சுவேஷனஸ் அப்ரோச்

**132.** பிழையான வாசிப்புப் பழக்கம் உருவாவதற்கு ஒரு காரணம் :

(1) பன்மொழிச் சூழல்

(2) இருமொழித்தன்மை

(3) அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உள்ள வகுப்பு

(4) விரல் நுனியால் சுட்டிக்காட்டி அதன்வழி கண்களால் படித்துச் செல்வது

**133.** சொல் அறிவு முறை (வெர்ட் நாளெட்ஜ்) வழியாக எந்த கற்பித்தல் - கற்றல் தடை தீர்க்கப்படுகிறது?

(1) வாக்கிய அமைப்பு வரிசை முறைக்கு உதவி செய்வது

(2) சரியான சொல் உச்சரிப்பு

(3) விளக்கமளிப்பதில் குழந்தைகள் கடினத்தன்மையை எதிர் கொள்வதில்லை

(4) மேற்குறித்த அனைத்தும்

**134.** பின் வருவனவற்றில் எது திறன் பெறுதல் நோக்கங்களுடன் தொடர்புடையதில்லை?

(1) வாசிப்பு

(2) எழுதுதல்

(3) கவனித்தல்

(4) மொழியின் மீதான ஆர்வம்

**135.** மொழியறிவு வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் காரணக்கூறு :

(1) உடல் நலம்

(2) அறிவுத்திறன்

(3) தனிமனித பண்பு வேறுபாடுகள்

(4) மேற்குறித்த அனைத்தும்

*கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கே. எண்.* **136–143** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

அகப்பொருள் புறப்பொருள் என்னும் தமிழ் நூல்வகை இரண்டனுள் சிறந்த அகத்திணையாய்வு இனிப் பன்முறையான் மேற்கொள்ளப்படும். ஆய்வுக்கிடை எத்தனையோ கருத்து மாறாட்டங்கள் வல்லவன் இட்ட முடிச்சுப்போலத் தோன்றி நம்மை மலைவிக்கின்றன, குழந்தைக்குப் போடும் புதிர்கள் போல நம்மறிவைச் சோதிக்கின்றன. கயிறு செய்வோன் முடிச்சோடு செய்வதில்லை. அதனைப் பயன் கொள்வார் தம் அறியாமையாலும் துணிச்சலாலும் முடிச்சுக்கள் பட்டுவிடுகின்றன. புதிர்கள் போடுவார்க்கேனும் விளங்கவேண்டுமல்லவா? சிலர்க்குப் புதிர்கள் இடத் தெரியுமேயன்றி அவற்றை விடத்தெரியா. இங்ஙனமாக அகத்திணைக்குக் காலந்தொறும் ஏறிய முடிச்சுக்களும் பலவாயின. இப்படி முடிச்சுக்களை கடும் புதிர்களைக் கண்டு மலையாதும். இடையில் தோன்றிய முடிச்சு எடுத்துப் புதிர்விடுத்துப் போவதுதான் ஆய்முறை என்று மயங்காதும், ஆய்வாளன் அகத்திணை மூல இலக்கியத்தோடு நேரடி அறிவுத் தொடர்பு கொள்ளும் அடியவன் போலச் செம்பொருள் காண்பான். மரபியல், நூலியல், அறிவியல், உளவியல் பற்றிச் சொல்லுங்காலைத் தம் பற்சிக்கு ஏற்ப அகத்திணை ஐயங்கள் அகன்றொழியக் காண்பான். தொல்பழம் படைப்பான அகவிலக்கியத்தின் உள்ளங்காண முயலும் நமக்கு இற்றைத் தமிழ் மொழியின், நாகரிகத்தின் வேறுபாட்டால் ஐயப்பாடு பல தோன்றுதல் இயல்பினும் இயல்பே. ஐயத்தோற்றம் உண்மைத் தோற்றத்துக்கு வழி காட்டும் ஆகலின், அகத்திணைக் கல்வியாளர்க்கு உண்டாம் ஐயக்கூறுகளை முதற்கண் மொழிகுவல்.

திருமண வாழ்வு என்னும் கற்பியலுக்கு இருநெறிகள் உள. களவுநெறி, மரபுநெறி என்று அவை சொல்லப்படும். இவ்விரு நெறியிலும் களவே சங்க விலக்கியத்துப் பாடல் சான்றது என்பதை நாம் அறிவோம். களவொழுக்கத்தில் காதல் நெஞ்சங்கள் விம்மியெழுகின்றன, விரைந்து அலைகின்றன, இயல்பு கடந்து எண்ணுவதும் சொல்லுவதும் செய்கின்றன. இவ்வெண்ணக் கிளர்ச்சிகள் பாடலுக்கு விறுவிறுப்பைக் கொடுத்தலின், களவு சான்றோர்களால் பாடுபெற்றது. அன்னோர் பாடியது கள்ளக் களவன்று, கற்புடைய காதற் களவாதலின், களவுப் பாடல் காலம் கடந்த இலக்கியமாய் இலக்கணம் பெற்றது. களவுக் காதல் பாடல் கொண்டமையால் அந்நெறி உயர்ந்தது என்றோ, பெற்றோர் கூட்டுவிக்கும் இயல்புக் காதல் பாடல் பெறாமையால், இந்நெறி தாழ்ந்தது என்றோ கொள்ளற்க. சங்க இலக்கியத்து 882 களவுப் பாடல்கள் உள.

**136.** ஆய்வுகள் அகப்பொருள் புறப்பொருள் பற்றியன. மலைவிப்பது இதுபோலவும், சோதிப்பது இது போலவும் உள்ளது. வரிசை முறைப்படி இவ்வாறு குறிப்பிடலாம் :

(1) பன்முறை ஆய்வு போலவும், அகத்திணை போலவும்

(2) அகத்திணை போலவும், புறத்திணை போலவும்

(3) இறைவன் இட்ட முடிச்சு, குழந்தை போடும் புதிர்

(4) முடிச்சு அற்ற புதிர், வல்லவன் வகுத்த முறை

**137.** ஆய்வாளர்கள் செம்பொருள் காண செய்ய வேண்டியது :

(1) புதிர்களைக் கண்டு மலைதல், முடிச்சுகளை விடுத்தல்

(2) மூல இலக்கியத்தோடு நேரடி அறிவுத் தொடர்பு கொள்ளுதல்

(3) புதிர்களைப் போடுவதுடன் அவிழ்க்கும் திறன்

(4) இடையில் தோன்றிய முடிச்சுகளை இடம் காட்டுதல்

**138.** காலம் தோறும் .............. ஏறிய முடிச்சுகள் பயன்படுத்துவோரின் .................. மற்றும் .............. உருவாயின.

(1) புறப்பொருளுக்கு, ஆய்வு, மலைப்பால்

(2) அகத்திணைக்கு, அறிவு, மயக்கத்தால்

(3) ஆய்வில், முயற்சி, ஐயத்தால்

(4) அகத்தினைக்கு, அறியாமை, துணிச்சலால்

**139.** அகத்திணை ஐயங்கள் மறைவதற்கு இவை குறித்து சொல்லுவதில் முயற்சிக்கு ஏற்ப விளைவு நேரும். அமைந்துள்ள முறையில் அடையாளம் காண்க.

(1) மரபியல், நூலியல், அறவியல், உளவியல்

(2) செம்பொருள், தொல்பழமை, அகவியக்கியம், மூல இலக்கியம்

(3) மரபியல், செம்பொருள், அகவிலக்கியம், நூலியல்

(4) உளவியல், அறிவியல், நூலியல், மரபியல்

**140.** ஐயப்பாடு உருவாதலுக்காரணம் என இவற்றைக் கூறலாம் :

(1) அகவிலக்கியம் தொல்பழமையானது, உண்மைத்தோற்றத்து வழி குறைவாக உள்ளது

(2) இன்றுள்ள தமிழ்மொழி வேறுபட்டுள்ளது, நாகரிகம் மாறுபட்டுள்ளது

(3) ஆய்வு முறையில் ஏற்படும் மலைப்பும் மயக்கமும்

(4) தமிழ்மொழி மாறுபடாமல் இன்றும் உள்ளது, நாகரிகம் வேறுபட்டுள்ளது

**141.** ................, ................, இரண்டும் ............ எனச் சொல்லப்படும்

(1) கற்புநெறி, காதல் நெறி, பாடல் நெறி

(2) கற்பு, காவு, களவொழுக்கம்

(3) களவுநெறி, மரபுநெறி, கற்பியல்

(4) கற்பியல், களவியல், புறப்பொருள்

**142.** களவு சான்றோர்களால் பாடப்பெற்றதற்கு காரணம் என இவ்வுரை சொல்வது :

(1) களவுப் பாடல்கள் காலம் கடந்து நிற்கிறது

(2) காதல் எண்ணக் கிளர்ச்சிகள் பாடலுக்கு விரைவியக்கம் கொடுக்கின்றன

(3) இயல்பு கடந்த எண்ணங்கள் இலக்கணமாக மாறுகின்றன

(4) கற்புடைய காதல் உயர்ந்தது எனச் சான்றோர் உணர்ந்தனர்

**143.** பெற்றோர் கூட்டுவித்தல் .................. எனில், இருவர் இணைந்து ஏற்பது .................. எனச் சுட்டப்படுகிறது.

(1) திருமண வாழ்வு, கற்பு மணம்

(2) உயர்ந்தது, தாழ்ந்தது

(3) தாழ்ந்த நெறி, உயர்ந்தநெறி

(4) இயல்புக் காதல், களவுக் காதல்

*கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கே. எண். **144–150** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :*

புத்தர் நிர்வாணம் அடைந்த பிறகு, அவரைப் பின் பற்றியொழுகிய பிக்ஷுக்கள் பற்பல நாடுகளிலும் சென்று இம்மதக்கொள்கையைப் பரவச்செய்தது போலவே, தமிழ் நாட்டிலும் வந்து, நகரம் கிராமம் என்னும் வெறுபாடின்றி எல்லாவிடங்களிலும் தமது மதக்கொள்கையைப் போதிப்பதையே தமது வாழ்நாட்களின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். தமிழ் நாட்டில் ஆங்காங்கிருந்த அரசர், வணிகர், செல்வந்தர் முதலானவர்களின் பொருளுதவி பெற்று விகாரைகளையும், பள்ளிகளையும், சேதியங்களையும், ஆராமங்களையும் ஆங்காங்கே நிறுவினார்கள். மடங்களில் வாழும் பௌத்தத் துறவிகள் மருத்துவம் பயின்று, தம்மிடம் வரும் பிணியாளருக்கு இலவசமாக மருந்து கொடுத்துத் தொண்டு செய்துவந்தார்கள். அன்றியும், தமது பள்ளிகளில் பாடசாலைகளை அமைத்துச் சிறுவர்களுக்குக் கல்வியையுங் கற்பித்துவந்தார்கள். பௌத்தருக்குரிய நன்னாட்களில் நாட்டு மக்களைத் தமது பள்ளிக்கு அழைத்து, மணல் பரப்பிய முற்றங்களில் அமரச்செய்து, திரிபிடகம், புத்தஜாதகக் கதைகள், புத்தசரித்திரம் முதலான நூல்களை ஓதிப் பொருள் சொல்லியும் மக்களுக்கு மதபோதனை செய்துவந்தனர். மற்றும், குருடர், செவிடர், முடவர் முதலானவருக்கும், ஏழைகளுக்கும் உணவு கொடுத்து தவ அறச்சாலைகளை அரசர் செல்வந்தர் முதலானோர் உதவிபெற்று நிறுவினார்கள். இவ்வாறு நாட்டுமக்களுக்கு நலம் புரிந்துகொண்டே பௌத்தமதத்தின் கொள்கைகளையும் போதித்துவந்தபடியால், இந்த மதம் தமிழ் நாட்டிலும் நன்கு பரவி வளர்ந்தது.

இவையன்றியும், இந்த மதம் மேல்சாதி கீழ்சாதி என்று பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டாதபடியினாலும், எக்குடியிற் பிறந்தோராயினும், அன்னவர் கல்வி அறிவுகளிற் சிறந்தோராய்த் தம் மதக்கொள்கைப்படி ஒழுகுவாராயின், அவரையுந் தங்குருவாகக் கொள்ளும் விரிந்த மனப்பான்மை கொண்டிருந்தபடியினாலும், அக்காலத்தில் சாதிப்பாகுபாடற்றிருந்த தமிழர் இந்த மதத்தை மேற்கொண்டனர் எனறும் தோன்றுகின்றது. இச்செய்திகளெலாம் தமிழ் நூல்களிலும் ஆங்காங்கே காணப்படும் குறிப்புகளைக்கொண்டு அறியலாம். பௌத்த மதம் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த செய்தி, சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், நாலாயிரப்பிரப்பந்தம், பெரியபுராணம், நீலகேசி முதலிய நூல்களினால் அறியக்கிடக்கின்றது.

**144.** பிட்சுகளின் வாழ்நாள் குறிக்கோளாக அமைந்தது :

(1) நகரம், கிராமங்களில் வணிகத்தைப் பரப்புவது

(2) நகரம், கிராமம் என்னும் வேறுபாடின்றி தம் சமயக் கொள்கைகளைப் போதிப்பது

(3) தமிழ் நாட்டில் பிறநாடுகளின் மதக் கொள்கைகளைப் பரப்புவது

(4) நகரத்திலிருந்து கிராமங்களுக்கு பொருளுதவியைப் பெற்றுத் தருவது

**145.** மருத்துவம் பயின்று பிணியாளர்களுக்கு மருந்து கொடுத்துத் தொண்டு புரிந்தவர்கள் :

(1) அரசர், வணிகர், செல்வந்தர்கள்

(2) பள்ளிகளை அமைத்து கல்வி கற்பித்த துறவிகள்

(3) மடங்களில் வாழ்ந்த பௌத்தத் துறவிகள்

(4) அறச்சாலை அமைத்த அரசர்கள் செல்வந்தர்கள்

**146.** பள்ளிகளில் போதிக்கப்பட்ட நூல்கள் :

(1) திரிபிடகம், புத்த ஜாதகக் கதைகள், புத்த சரிதம்

(2) மருத்துவ நூல்கள், மதக்கொள்கைகள், புத்த சரிதம்

(3) சிலப்பதிகாரம், பெரியபுராணம், நீல கேசி

(4) மணிமேகலை, தேவாரம், நீல கேசி

**147.** உணவு கொடுத்து உதவ அமைக்கப்பட்டவை ..............., அவற்றை நிறுவ உதவி செய்தவர்கள் ..............., ....................

(1) விகாரைகள், ஏழைகள், வணிகர்கள்

(2) அறச்சாலைகள், அரசர்கள், செல்வந்தர்கள்

(3) பள்ளிகள், சிறுவர்கள், பிணியாளர்கள்

(4) பாடசாலைகள், அரசர்கள், வணிகர்கள்

**148.** எக்குடியில் பிறந்தோராயினும் ஒருவரைக் குருவாகக் கொள்ள வேண்டிய நிலை இதனால் உருவானதெனச் சொல்லலாம். அந்நிலைக்கு தேவையானவை :

(1) மேல் சாதியில் பிறந்து உயர்வு தாழ்வு பாராட்டாத தன்மை

(2) கீழ்ச்சாதி என்ற நிலையை மறுக்கும் தன்மை

(3) ஒருவர் கல்வி அறிவில் சிறந்தவராய், மதக் கொள்கைப் படி ஒழுக வேண்டும்

(4) மதக் கொள்கை பற்றிய தெளிவும் உயர்சாதியில் பிறப்பும்

**149.** தமிழகத்தில் அன்று நிலவிய நிலையை இவ்வாறு குறிப்பிடலாம், அக்காலத் தமிழரை இவ்வாறு அடையாளம் காட்டலாம்.

(1) கல்வி நிறைந்த நிலை, கற்றோராகிய தமிழர்கள்

(2) பெளத்தம் தழுவிய நிலை, மதக்கொள்கை கொண்ட தமிழர்

(3) கல்வி அறிவில் சிறந்த நிலை, மதக் கொள்கைப்படி ஒழுகிய தமிழர்

(4) சாதியில் உயர்வு தாழ்வு பாராட்டாத நிலை, சாதிப்பாகுபாடு அற்ற தமிழர்

**150.** இப்பகுதியில் குறிப்பிடப்படும் தமிழ் நூல்களில் ................, ................ சைவ சமயத்தன, ...................., ................. வைணவ சமயம் சார்ந்தது, மணிமேகலை ..................... சார்ந்தது

(1) சிலப்பதிகாரம், நீலகேசி, தேவாரம், சமண சமயம்

(2) தேவாரம், பெரிய புராணம், நாலாயிரப்பிரபந்தம், பெளத்த சமயம்

(3) நீலகேசி, தேவாரம், பெரியபுராணம், பெளத்த சமயம்

(4) பெரிய புராணம், நாலாயிரப்பிரபந்தம், தேவாரம், பெளத்த சமயம்

*கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :*

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூறக்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும். விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுளன.
2. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் கறுப்பு/நீலம் பந்துருள் முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர் தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூறக்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூறக்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூறக்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர். விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருபதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்.
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டுவரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வு இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச் சூழலிலும் தேர்வு நூறக்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.
15. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூறக்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

## निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर-पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **काले/नीले बॉलपॉइंट पेन** से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर-पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर-पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर-पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
5. परीक्षा पुस्तिका/उत्तर-पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाजिरी-पत्र में लिखें।
6. OMR उत्तर-पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी। इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्विच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए। इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और उनके विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर-पत्र दिए बिना एवं हाजिरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाजिरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर-पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा। **परीक्षार्थी अपने बाएँ हाथ के अँगूठे का निशान हाजिरी-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ।**
12. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा।
14. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर-पत्र का कोई भाग अलग न करें।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल/कक्ष छोड़ने से पूर्व उत्तर-पत्र निरीक्षक को अवश्य सौंप दें।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।***

## READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Black/Blue Ballpoint Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the Examination Hall/Room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the Examination Halls/Rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against them including cancellation of examination.
9. Each candidate must show on demand his/her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his/her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic/Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall/Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***